மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் உள்ள சரவண பவா (தனியார்) ஆலைத் தொழிலாளர்கள் 27 பேரில் 25 பேர் 1971—72-ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடை வழங்குவது குறித்து 13-11-1972 அன்று 1½ மணி நேரமும் மீண்டும் 17-11-1972-லிருந்து 20-11-1972 வரையிலும் வேலைநிறுத்தம் செய்தனர். கோயம் புத்தூர், தொழிலாளர் நல உதவி ஆணையாளர் தலையிட்டதன் பேரில், தொழிலாளர்கள் 21-11-1972 அன்று மீண்டும் வேலைக்குச் சென்றனர். 8-1/3 சதவீத ஊதியக் கொடை வழங்கவேண்டு மென்ற கோரிக்கையின் மேல் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 25-11-1972 அன்று உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

விவாதத்திற்கு நேரம் ஒதுக்குதல்

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை விவர அறிக்கை, உணவுக் கொள்கை பற்றிய விளக்கக்குறிப்பு ஆகிய இரண்டின் மீதும் விவாதம் நடைபெற இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சட்ட மன்ற மேலவை விதிகளின் 80-ஆவது விதியின் கீழ், 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை விவர அறிக்கை மீதான விவாதம் நடத்த ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத நேரத்தையும், எஞ்சியுள்ள நேரத்தை உணவுக் கொள்கை பற்றிய விளக்கக்குறிப்பின்மீது விவாதம் நடத்தவும் நான் வரையறுத்திருக்கிறேன். எனவே காலவரையறைக்குள் சுருக்கமாக விவாதத்தினை முடித்துக்கொள்ள ஒத்துழைக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1973 மார்ச் 27] [சட்டமன்றத் தலைவர்]

இரண்டிற்கும் இரண்டு மணிநேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 10 நிமிடத்திற்குமேல் தயவுசெய்து யாரும் பேச வேண்டாம்.

THIRU G. SWAMINATHAN : Sir, now the time is 4-30. If only two hours' time is allowed for the discussion today, I want to know whether we are going to close at 6-30 p.m.

MR. CHAIRMAN : If there is more time available, the hon. Members who want to speak during the discussion on the Policy Note on Food may take some more time. The excess time of thirty minutes could be divided amongst the various Members.

3. அரசினர் தீர்மானங்கள்

(1) சட்டப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "1973-74-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. கே. ராஜாராம்.
2. திரு. எஸ். டி. ஆதித்தன்.
3. திரு. க. அறிவழகன்.
4. திரு. வி. தங்கபாண்டியன்.
5. திரு. வ. ஈஸ்வரமூர்த்தி."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"1973-74-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்:—

1. திரு. கே. ராஜாராம்.
2. திரு. எஸ். டி. ஆதித்தன்.
3. திரு. க. அறிவழகன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS